[*2023 ஏப்ரல் 21*

(ஔ) கடலூர் மாவட்டம், நீட் தேர்வு அச்சத்தால் மாணவி நிஷா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடலூர் மாவட்டம், நெய்வேலி வட்டம் 9-ல் வசித்து வரும் NLC ஒப்பந்தத் தொழிலாளி உத்ராபதி என்பவரின் மகள் நிஷா, NEET தேர்வு எழுத நெய்வேலி இந்திரா நகரிலுள்ள ஒரு தனியார் பயிற்சி மையத்தில் படித்து வந்தார். NEET தேர்வு பயம் காரணமாக 5-4-2023 அன்று மாலை 5-00 மணியளவில் வடலூர் இரயில்வே கேட் அருகில், பெங்களூரு-காரைக்கால் விரைவு இரயில் முன்பு பாய்ந்து அவர் தற்கொலை செய்து கொண்டார். இதுபோன்ற தற்கொலையைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த ஏழை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டீர்கள்.*

(அஅ) ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக அதிகரித்து வருகின்ற ஆணவக் கொலைகளைத் தடுக்கும் விதத்தில் தனிச் சட்டம் இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஆ) தேங்காய் மட்டை தொழிற்சாலை முடங்கிவரும் நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உரிக்கும் மட்டையைப் பயன்படுத்தும் தொழிற்சாலை தொழில் இப்போது முடங்கிக்*

2023 ஏப்ரல் 21] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிகமாக தேங்காய் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு அந்த மட்டையிலிருந்து ரூ.1.50, ரூ.2.00 கிடைக்கும். சுற்றுச்சூழலின் காரணமாக இந்தத் தொழில் முடங்குவதால், ஏறத்தாழ ரூ.1,000 கோடி நஷ்டம் ஏற்படுவதால், அரசு உடனடியாக அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அஇ) நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியினால் ஏற்படும் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். அவருக்கு மைக் கொடுங்கள்.*

முற்பகல் 10–25

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து, அது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இந்தியாவிலே 60 விழுக்காடு மக்களுக்கு ஊட்டச்சத்து குறைவாக இருப்பதால், அரிசியில் இரும்புச் சத்தை சேர்க்கக்கூடிய வகையில், செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது. ஆனாலும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறைபாடு இருப்பதால், இரும்புச் சத்தை அதிகரிப்பதன் காரணமாக நீரிழிவு நோய், கணைய நோய். . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப் பார்த்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) புரிந்து கொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) புரிந்துகொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) அதில் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லிவிட்டீர்கள். அதைப் புரிந்து கொண்டுவிட்டார்கள்.*

(அஈ) ஒன்றிய அரசு இரத்து செய்த அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை மீண்டும் அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*